factor, will the Government desist from translating these Acts into Tamil ? Will the Government also issue instructions to the 'High Court that Tamil documents in suits to be given to the High Court should be translated in English ? Will the Government take action to instruct officers in this regard ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலிலே, நம்முடைய கனம் அங்கத்தினர் அவர்கள் தமிழிலே சட்டங்கள் கொண்டு வரப்படுமா என்று கேட்டார்கள். இப்போது அவ்வாறு தமிழிலே சட்டங்களைக் கொண்டு வரும்போது சிக்கல்கள் ஏற்படாதா என்று கேட்கிறார்கள். சிலம்பு செல்வரிடத்திலே பயிற்சி பெற்றவர் தமிழ் மொழியைப் பற்றி இவ்வாறு கருத்துக் கொண்டிருப்பது சரியல்ல. டில்லியில் இந்தியில்கூட லா ஜர்னல் போடத் தொடங்கி இருக்கிறார்கள். அந்த நிலையில் நம்முடைய தமிழில் முடியாது என்று கருதுகிறார்கள் ? இடைக்காலத்தில் ஏற்படக்கூடிய சங்கடங்களை தவிர்த்து தமிழிலே எல்லாவற்றையும் கொண்டு வர வேண்டு மென்பதுதான் திட்டம்.

கோவையில் உரத் தொழிற்சாலை

*** 317 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் சிறிய அளவு உரத்தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்—

(அ) கோவை மாவட்டத்தில் சிறிய அளவு உரத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதும் அரசாங்கத்திடம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மற்றப் பகுதிகளை விட அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டு அங்கு விவ சாயம் செய்கிறார்கள். ஆகவே அந்த இடத்தில் அவர்களுக்கு ஒரு உரத் தொழிற்சாலை ஏற்படுத்திக் கொடுத்தால் போக்குவரத்துச் செலவும் குறை யும், அதோடு எளியமுறையில் அது கிடைக்கவும் வசதியாக இருக்கும். ஆகவே அதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உரத் தேக்கம் பற்றிதான் அரசாங் கம் கவலை கொண்டிருக்கிறது.

திரு. எம். பூபதி : கோவை காரமடையில் தனியார் நடத்தும் தொழிற்சாலையை விரிவுபடுத்த அவர்கள் அரசாங்கத்தைப் கோரியிருக்கிறார் களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

தாடகைநாச்சியம்மன் ஓடைத்திட்டம்

*** 318 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தாடகைநாச்சியம்மன் ஓடைத் திட்டத்திற்கு எஸ்டிமேட் (estimate) போடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?